DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
CC.200/2019
Prosecution witness – PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.சத்யா | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A3 present.)
15.06.2026 – 11.15 AM

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பரமக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.07.2017 ம் தேதி நான் கடலாடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய தினம் பொறுப்பு அலுவலராக கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் இருந்த போது மாலை 06.00 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.34/2017 பிரிவுகள் 294(b), 323 IPC an TNPHW Act –ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி முதல் தகவல் அறிக்கையுடன் புகாரையும், அசலையும் இணைத்து அப்போது அதிகார வரம்பு கொண்ட முதுகுளத்தூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், சம்மந்தப்பட்ட நகல்களை உயரதிகாரிகளின் பார்வைக்கும் வைத்தேன். என்னை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சம்பவம் தொடர்பாக நிலையத்தில் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த இரு வழக்குகளையும் நான் தான்

பதிவு செய்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை. மாலை 06.00 மணிக்கு தான் புகாரை பெற்றேன். இவ்வாறு தான் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன். புகார் அளிக்க அ.சா.1உடன் யார் யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அ.சா.1 மட்டும் தான் நிலையத்தில் வந்து புகார் அளித்தார். நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 அளித்த புகாரை முறையாக விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு முறையாக விசாரிக்காததால் தான் என்னால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரத்தை சரியாக கூற இயலவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி